**சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2023**

---

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.

மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள 06 வீதிப் பிரிவுகளின் 131.5 கிலோமீற்றரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 81.75 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. ரூபா 2,828 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 யூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 05 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2023 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் கடனுக்காக செலுத்திய திரண்ட வட்டி ரூபா 584.77 மில்லியன் ஆகும். ஆனால், அது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை அதே தொகையால் குறைத்து காட்டப்பட்டுள்ளன. | 584.77 | வெளிநாட்டுக் கடன் தொடர்பான வட்டிக் கட்டணங்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட தனியான செலவின வாக்குப்பணத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. கடன் வட்டி கொடுப்பனவிற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு பாதீட்டு ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில்லை. எனவே இது செசயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் செலவினமாக பதிவு செய்யப்படவில்லை. | 2013 நவம்பர் 23 ஆம் திகதிய 230/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் வட்டி கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 04 இன் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை சுவீகரித்தல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாகக் காரணமான கடன் பெறுதல் கிரயம், அந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டும். எனினும், RDA நிதியளிப்பு வசதியுடன் தொடர்புடைய கடன்பெறுதல் கிரயம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை . | 55.65 | இந்த கடன் செயற்திட்டத்தால் அல்ல, வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் (RDA) கடன் பெறப்பட்டது. இதன் விளைவாக, கடன் பெறுதல் கிரயம் RDA இன் பொறுப்பாகும். நடைமுறை வேலையின் கீழ் RDA இந்த கடன் பெறுதல் கிரயத்தை கணக்கீடு செய்கிறது. செயற்திட்டம் பூர்த்தியடைந்து RDA இடம் ஒப்படைக்கப்பட்டதும், அவர்கள் செயற்திட்ட கிரயத்தையும் அதனுடன் தொடர்புடைய கடன் பெறுதல் கிரயங்களையும் மூலதனமாக்குவார்கள். எனவே, செயற்திட்டம் அதனது நிதிக்கூற்றுக்களில் கடன் பெறுதல் கிரயங்களை வெளிப்படுத்தியுள்ளது. | 2013 நவம்பர் 23 ஆம் திகதிய 230/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் கடன்பெறுதல் கிரயம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் காணித் துண்டுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் காணித் துண்டுகள் | | |
| காணி சுவீகரிப்பு | உரித்துறுதி யினை RDA இற்கு மாற்றுதல் | 1,370 | 78 | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் மூலம் 1,370 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 1,308 காணித்துண்டுகளிற்காக ரூபா 195.98 மில்லியன் இழப்பீடு மற்றும் ரூபா 56.22 மில்லியன் தாமத வட்டி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தன. | மோசமான மேற்பார்வையால் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் தாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்** 2023.12.31 இன் பின்னர் 44 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை தெஹியோவிட்ட-தெரணியகல-நூரி வீதியுடன் தொடர்புடைய தெரணியகல DS அலுவலகத்திற்கு சொந்தமான 72 காணித்துண்டுகள் மற்றும் கண்டி-யாழ்ப்பாண வீதியுடன் (15.75 கிமீ - 32-54 கிமீ) தொடர்புடைய மாத்தளை DS அலுவலகத்திற்கு சொந்தமான 06 காணித்துண்டுகளாகும். 44 ஆம் பிரிவின் கீழான பதிவை விரைவுபடுத்துமாறு அனைத்து தொடர்புடைய DSS இற்கும் தெரிவிக்கப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை கால எல்லைக்குள் அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வின் போது எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் 4.2 ஆம் உட்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக, செயலாற்றல் உத்தரவாதங்களை வழங்குவதற்கான செலவை கோருவதற்கு ஒப்பந்தக்காரர்களை அனுமதிப்பதன் மூலம் வீதி புனரமைப்புப் பணிகளுக்கான அளவிடை பட்டியலில் | ஒப்பந்த நிபந்தனைகளின் (COC) 4.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரர் தங்கள் சொந்த செலவில் செயலாற்றல் பிணையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இந்த செலுத்தும் உருப்படியை சேர்க்க வேண்டாம் என்றும் | ஒப்பந்த நிபந்தனைகள் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும், மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு |

| | | | |
|---|---|---|---|
| | தனியான செலுத்தும் உருப்படிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் ஒப்பந்ததாரர்களால் பெறப்பட்ட செயலாற்றல் பிணைமுறிகளின் செலவை மீள்நிரப்பு செய்வதற்காக 03 ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 790,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | எதிர்கால ஒப்பந்தங்களில் COC ஐ சீர்செய்ய வேண்டாம் என்றும் PMU இற்குத் தெரிவிக்கப்பட்டது. | சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வின் போது எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் 14.8 ஆம் உட்பிரிவின் பிரகாரம் தாமத காலத்தின் போது செலுத்தப்படாத தொகையின் மீது மாதாந்தம் நிதிக் கட்டணங்களை இணைத்துக் கொள்ள ஒப்பந்ததாரருக்கு உரித்துண்டு. ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் ஆர்டிஏ/எம்எவ்ஏபி/ஐசீபீ/எஸ்எவ்டி-2/02 மற்றும் ஆர்டிஏ/எம்எவ்ஏபி/ஐசீபீ/எஸ்எவ்டி-2/03 பொதிகளில் ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 67.78 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனவே, ஒப்பந்ததாரர்களுக்கு பணம் செலுத்துவதில் ஏற்படும் தாமதம் செயற்திட்ட கிரயத்தை மீறுவதற்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | இரண்டு ஒப்பந்தங்களின் நோக்கெல்லை மாற்றத்திற்கு நன்கொடையாளரின் அங்கீகாரம் கோரப்பட்டதுடன் நன்கொடையாளரிடமிருந்தான அங்கீகாரத்தில் தாமதம் ஏற்பட்டது. அதன் பிரகாரம், IPC கொடுப்பனவுகள் தாமதமாகியதுடன் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர் தாமதக் கட்டணங்களைக் கோரியுள்ளார். | தாமதம் குறித்து முறையான விசாரணை நடாத்தப்பட்டு, அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டங்கள் குறித்து தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் 4/3 ஆம் இலக்க பாலத்தின் அகலப்படுத்தலின் நிர்மாணப் பணிகள் 2019 ஒக்தோபர் 03 இல் ஆரம்பிக்கப்பட்டு 2021 சனவரி 02 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரால் ஒப்பந்தம் 2021 ஒக்தோபர் 26 இல் கையளிக்கப்பட்ட போதிலும். பாலத்தின் மீது வீதிப் பகுதியில் நிலவும் மேற்பரப்பு சேதங்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | தற்போதுள்ள நீர்வழிப்பாதைகள் NWS&DB ஆல் கைவிடப்படவில்லை. மேலும் தண்ணீர் கசிவு பழுதுபார்க்கும் பணிகள் காரணமாக, வீதியின் மேற்பரப்பு சேதமடைந்துள்ளது. எனினும், அதனை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதம் மற்றும் செயற்திட்ட கிரயத்தை குறைப்பதற்கு NWS&DB உடன் பயனுள்ள வேலைத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |

### 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 யூன் முதல் தொடங்கும் ஏறத்தாழ பத்து வருட செயற்திட்டக் காலத்திற்கு எஸ்ஏஆர் 225 மில்லியனுக்குச் சமமான ரூபா 10,628 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,899.03 மில்லியனுக்குச் சமமான எஸ்ஏஆர் 219.11 மில்லியனை மாத்திரமே இந்த செயற்திட்டம் பயன்படுத்தியுள்ளது. எனவே 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,728.97 மில்லியனிற்கு சமமான எஸ்ஏஆர் 5.89 மில்லியன் பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் 4/1 ஆம் இலக்க பாலத்தை புனரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனுக்கள் அழைக்கப்பட்டு ஒப்பந்த வழங்கல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த ஒப்பந்த வழங்கலை எதிர்த்து கேள்விதாரர் ஒருவர் மேன்முறையீடு செய்ததால், செயற்திட்டப் பணியை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. அதன் பிரகாரம், இது கடனில் பயன்படுத்தப்படாத மீதியைக் காட்டுகிறது. | செயற்திட்ட காலப்பகுதியில் நிதியைப் பயன்படுத்துவதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுக்கான பாதீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ரூபா 349.46 மில்லியனாக இருந்ததுடன், அதில் செயற்திட்டமானது மீளாய்வாண்டில் ரூபா 341.15 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியுள்ளது. 2012 ஆம் ஆண்டில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 31 வரையிலும் இதுபோன்ற நடவடிக்கைகள் நடைபெற்று வந்தமை அவதானிக்கப்பட்டது. | GOSL கூறு செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஏற்கனவே ரூபா 82.05 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் கடனிலிருந்தான பணவளிப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, செயற்திட்டம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 211.28 மில்லியனை காட்டியிருந்ததுடன் ரூபா 47.83 மில்லியன் மிகுதி தொகை கணகீடு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வெளிநாட்டு உதவியாக காட்டப்பட்டிருந்தது. எனவே, செயற்திட்டத்தின் மூலம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 341.15 மில்லியன் ஆகும். | செயற்திட்ட காலப்பகுதியில் நிதியைப் பயன்படுத்துவதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகை, மின்சாரம், பதவியணியினருக்கான சம்பளம், துப்பரவாக்கல் கட்டணம் போன்ற பொதுவான செலவினங்கள் மீளாய்வாண்டில் செயற்திட்டத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. எனவே மீளாய்வாண்டில் நானாவித வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களுக்கிடையில் பொதுவான செலவினங்களைப் பிரிப்பதற்கு முறையான மற்றும் நம்பகமான முறை பின்பற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு செயற்திட்டத்தின் மொத்த கிரய மதிப்பீட்டின் அடிப்படையில், நானாவித வெளிநாட்டு உதவி செயற்திட்டப் பிரிவின் கீழ் உள்ள அனைத்து செயற்திட்டங்களுக்கும் இடையே மேந்தலை செலவினங்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொதுச் செலவினங்கள் அனைத்து இநானாவித செயற்திட்டங்களுக்கும் இடையே முறையாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வின் போது எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | கையளிப்பு சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியில் நிலுவையில் உள்ள பணிகளான மிகுதி நடைபாதைப் பிரிவு, வீதி சமிக்ஞை பலகைகள், மிகுதி ஒழுங்கைக்கான பாதை குறித்தல், வடிகால் சுத்தம் செய்தல், மிகுதி மூடும் சரிவுகள் இடுதல் (cover slabs) போன்றவற்றை செயற்திட்ட கிரயத்தை குறைப்பதற்கு நியாயமான காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | NWS&DB புதிய குழாய் பதிக்கும் பணியானது பாலம் நிர்மாணிக்கும் பணிகளுக்கு இணையாக மேற்கொள்ளப்பட்டதுடன் குழாய் பதிக்கும் பணிகள் பூர்த்தியடையும் வரை சில பாலப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. எனினும், நீர் கசிவு காரணமாக சில மேற்பரப்பு சேதங்களைத் தவிர, பாலங்களின் அனைத்து மீதமுள்ள பணிகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | தாமதம் மற்றும் செயற்திட்ட கிரயத்தை குறைப்பதற்கு NWS&DB உடன் பயனுள்ள வேலைத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |
| (இ) | காணி சுவீகரிப்பு செயன்முறை தொடர்பான சரியான தரவுத்தளத்தை செயற்திட்டம் பேணியிருக்கவில்லை என்பதும், அதனால், செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட மற்றும் இழப்பீடு வழங்கப்பட்ட நிலப்பரப்பை கணக்காய்வில் சரிபார்க்க முடியவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | காணி சுவீகரிப்பு விபரங்களை பேணுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணி சுவீகரிப்பு தொடர்பான சரியான தரவுத்தளத்தை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வின் போது எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |